## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 மாசித் திங்கள் 29–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.195/2024 –இல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 01/2025**

**அருள்செல்வி** ...**மனுதாரர்/வாதி.**

**–எதிர்–**

**01. தங்கம்**
**02. சிவக்குமார்** ...**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவில் மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.R.சதீஷ்குமார்** அவர்களும் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.A. வந்தேமாதரம்** அவர்களும் தோன்றினர். இந்த மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவை யிலிருந்த இந்த மனுவில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

### முகவுரை

கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய மனுதாரர்/வாதிக்கு அனுமதி வழங்கக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 08-ஆம் வகுமுறையின் 09-ஆம் விதியின்கீழ் இம்மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

### மனுவின் சுருக்கம்

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் வாதி ஆவார். பாகப்பிரிவினை கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக மனுதாரர்/வாதி முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளார்.

III rd ADJ Court, Salem

02. பிரதிவாதிகள் தாக்கல்செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கு 01-ஆம் இன சொத்தை 02-ஆம் பிரதிவாதியின் நலச்சார்பாக 02-ஆம் பிரதிவாதியின் தந்தை ரங்கசாமி 10.12.2015-ஆம் தேதியிட்ட அறுதி யாவணம் மூலம் கொடையாக கொடுத்துவிட்டதாகவும் வழக்கு 02-ஆம் இன சொத்தைப் பொறுத்து மேற்சொன்ன அதே நாளிலே வாதியும் ரங்கசாமியும் விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேற்சொன்ன இரு ஆவணங்கள் குறித்து எதிர்வழக்குரை தாக்கல்செய்த பின்புதான் மனுதாரர்/வாதிக்கு தெரியும்.

03. வழக்கு 01-ஆம் இன சொத்தை ரங்கசாமி கூட்டுக் குடும்ப வருமானத்தைக் கொண்டு கர்த்தா என்ற அடிப்படையில் 12.07.1985-ஆம் தேதியன்று கிரயம் வாங்கினார். அதனால் வழக்கு 01-ஆம் இன சொத்து கூட்டுக் குடும்ப சொத்து ஆகும். 07.09.1987-ஆம் தேதியன்று ஏற்பட்ட பாகப்பிரிவினை மூலம் வழக்கு 01-ஆம் இன சொத்து ரங்கசாமிக்கு ஒதுக்கப்பட்டது. வழக்கு 01-ஆம் இன சொத்து கூட்டுக் குடும்ப சொத்தாக உள்ள நிலையில் ரங்கசாமி மட்டும் 02-ஆம் பிரதிவாதிக்கு அச் சொத்தை அறுதியாவண கொடையாக கொடுக்க முடியாது. அந்த அறுதியாவணம் வழக்கு 01-ஆம் இன சொத்தில் வாதிக்கு இருக்கும் உரிமையை பாதிக்காது.

04. 10.12.2015-ஆம் தேதியன்று மனுதாரர்/வாதி அவரது அறிவுக்கு எட்டி விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை. 2014-ஆம் நாள் முதல் மன நலம் சரியில்லாமல் இருந்த மனுதாரர்/வாதியை 02-ஆம் பிரதிவாதி ஏமாற்றி எழுதி வாங்கிக்கொண்டிருக்கிறார் என்று தற்போதுதான் மனுதாரர்/வாதிக்கு தெரியவருகிறது. அந்த விடுதலைப் பத்திரம் மனுதாரர்/வாதியை கட்டுப்படுத்தாது.

05. மேற்சொன்ன இரு விவரங்களை கூடுதல் வாதுரையாக தாக்கல் செய்வது அவசியமாக இருக்கிறது. ஆகையால், இந்த மனுவை அனுமதித்து கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய மனுதாரர்/வாதிக்கு அனுமதி வழங்க வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

06. ரங்கசாமி 02-ஆம் பிரதிவாதிக்கு அறுதியாவணம் எழுதிக் கொடுத்தது தற்போதுதான் மனுதாரர்/வாதிக்கு தெரிந்தது என்று மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதி பொய். வழக்கு 01-ஆம் இன சொத்தையும் அதோடுச் சேர்ந்தச் சொத்தையும் ரங்கசாமியும் மற்றொருவரும் கூட்டாக கிரயம் வாங்கியிருந்தனர். கூட்டாக கிரயம் வாங்கியதை 07.09.1987-ஆம் தேதியன்று பாகப்பிரிவினை செய்துகொண்டதில் வழக்கு 01-ஆம் இன சொத்து ரங்கசாமியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது. வழக்கு 01-ஆம் இன சொத்து ரங்கசாமியின் தனிபட்டச் சொத்து ஆகும். வழக்கு 01-ஆம் இன சொத்து மனுதாரர்/வாதி சொல்வதுபோல் இந்து பொதுக் குடும்பச் சொத்து இல்லை. வழக்கு 01-ஆம் இன சொத்தை 10.12.2015-ஆம் தேதியன்று ரங்கசாமி 02-ஆம் பிரதிவாதிக்கு அறுதியாவண கொடையாக கொடுத்து சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டார். அன்றுமுதல் அச் சொத்தை 02-ஆம் பிரதிவாதி தனிபட்ட முறையில் அடைந்து அனுபோகம் செய்துவருகிறார். வழக்கு 01-ஆம் இன சொத்தில் மனுதாரர்/வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை.

07. வழக்கு 02-ஆம் இன சொத்தைப் பொறுத்து வாதியும் ரங்கசாமியும் 10.12.2015-ஆம் தேதியன்று விடுதலைப் பத்திரம் எழுதி

பதிவுசெய்து அச் சொத்தில் அவர்களுக்கு இருந்த உரிமையை விட்டுக் கொடுத்துவிட்டனர். அன்றுமுதல் அச் சொத்தை 02-ஆம் பிரதிவாதி முழுமையாக அடைந்து அனுபோகம் செய்துவருகிறார்.

08. 2014-ஆம் ஆண்டுமுதல் மனுதாரர்/வாதி மன நலம் பாதிக்கப் பட்டு சிகிச்சைப் பெற்றுவந்ததாகவும் அந்தச் சமயத்தில் அவரை ஏமாற்றி 02-ஆம் பிரதிவாதி விடுதலைப் பத்திரம் எழுதி வாங்கியதாகவும் சொல்லியுள்ளது பொய். ரங்கசாமியும் வாதியும் முழுச் சம்மதத்துடனே அந்த ஆவணத்தை நிறைவேற்றினர். வழக்குச் சொத்தில் மனுதாரர்/வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

**09. இம் மனு அனுமதிக்கத்தக்கதா?**

## தீர்முடிவு

10. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வழக்குரைக்கு எதிர்வழக்குரை தாக்கல்செய்யப்பட்ட பிறகு எதிர்வழக்குரை மூலம் எதிர்கட்டு (set off) அல்லது எதிர்கோரிக்கை முன்வைக்கப்பட்டாலன்றி எதிர்வழக்குரைக்கு பின்னிட்டு தரப்பினர்கள் வாதுரைகள் எதையும் தாக்கல்செய்ய முடியாது என்பதும் நீதிமன்றத்தின் அனுமதியுடன் கூடுதல் வாதுரைகளை தாக்கல்செய்யலாம் என்பதும் நன்கு நிறுவப்பட்டச் சட்டவிதி ஆகும்.

IIIrd ADJ Court, Salem

11. பாகப்பிரிவினை கோரி மனுதாரர்/வாதி தொடுத்துள்ள இந்த வழக்கிற்கான வழக்குரையில் வழக்கு 01-ஆம் இன சொத்து ரங்கசாமியின் தனிபட்டச் சொத்து என்று திட்டவட்டமாக சொல்லப்பட்டுள்ளது. தற்போது தாக்கல்செய்ய முனையும் கூடுதல் வாதுரையில் வழக்கு 01-ஆம் இன சொத்து இந்து கூட்டுக் குடும்ப சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது. கூடுதல் வாதுரை மூலம் மனுதாரர்/வாதி முன்வைக்க முனையும் வாதம் அவருடைய வழக்குரையில் கண்டுள்ள அடிப்படை வாதத்திற்கு முரணாக உள்ளது.

12. 10.12.2015-ஆம் தேதியன்று மனுதாரர்/வாதி சுயநினைவோடு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை என்ற எதிர்வாதத்தை கூடுதல் வாதுரை மூலம் சொல்ல வேண்டும் என்று மனுதாரர்/வாதி கோருகிறார். பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் சொல்லும் ஒவ்வொரு எதிர்வாதத்திற்கும் மறுப்பு தெரிவித்து அல்லது விளக்கம் அளித்து கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய வேண்டும் என்று கோருவது ஏற்புடையதல்ல. அந்த ஆவணம் சம்மந்தமாக தன்னுடைய மாற்றுக் கருத்தை சாட்சியத்தின் மூலமாக மனுதார்/வாதி சொல்ல முடியும்.

13. வாதுரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளில் ஏதேனும் குழப்பம் விளைவிப்பதாகவோ அல்லது கூடுதல் விளக்கம் தேவைப்படுவதாகவோ இருந்தால் மட்டுமே கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய அனுமதி வழங்க முடியும். இந்த மனு மூலம் மனுதாரர்/வாதி தாக்கல்செய்யக் கோரும் கூடுதல் வாதுரையின் உள்ளடக்கம் வழக்குரையின் உள்ளடக்கத்திற்கு முரணானதாக இருப்பதாலும் ஏற்கனவே வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை தெளிவுபடுத்தும் நோக்கத்திற்காக இல்லாததாலும் கூடுதல்

வாதுரை தாக்கல்செய்ய மனுதாரர்/ வாதிக்கு அனுமதி வழங்க முகாந்திரம் இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**இறுதிமுடிவு**

14. இறுதியாக, இந்த மனு தள்ளுபடிச் செய்யப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V
Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.03.13 19:20:33 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**

**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

III rd ADJ Court, Salem